## இலங்கை உள்ளுர் ஆளுகை நிறுவகம் - 2014

இலங்கை உள்ளுர் ஆளுகை நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 31 ஆம் இலக்க இலங்கை உள்ளுர் ஆளுகை நிறுவக அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவகத்தின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

அரச மற்றும் ஏனைய மூலதன மானியங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் காலக்கழிவிற்காக நிறுவகத்தினால் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் முழு மூலதன மானியங்களின் அளவு ரூபா 88,486,678 தொகையாக இருந்ததுடன், அதன் மூலம் உருவான சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 69,909,841 ஆக இருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசின் மானியமொன்றாக நிறுவகத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளுராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் கீழ் நடாத்திச் செல்லப்பட்ட கந்தளம சுற்றுலா விடுதிக்கு நிறுவகத்தினால் ரூபா 213,300 தொகை பெறுமதியான தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்ந்தும் நிறுவகத்திற்குச் சொந்தமான சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஊழியர் கடன் கணக்கில் ரூபா 52,811 ஆன அசாதாரண செலவு மீதியொன்று காணப்பட்ட போதிலும், அதனை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்கின் பிரகாரம் மீதி மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் மீதிக்கும் இடையே ரூபா 2,186,057 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**2.3 பெறவேண்டிய கணக்குகள்**

(அ) நிறுவகத்தினால் அச்சிடப்பட்ட தினக் குறிப்பேடுகளுக்காக கொடுப்பனவை பரீட்சித்த போது அமைச்சினால் பெற்றுக்கொண்ட தினக் குறிப்பேடுகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 492,000 தொகை 2015 யூலை 24 ஆந் திகதி வரையிலும் நிறுவகத்திற்கு கிடைக்கப்பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய முற்பணங்கள் ரூபா 44,657 தொகை இடர் கடன் மற்றும் ஆதனக் கடன் ரூபா 771,825 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2005 இன் 05 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் iii ஆம் பகுதி மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்க (திருத்திய) நிதி அதிகாரச்சட்டம் | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை புதிய கட்டிட நிர்மாண ஒப்பந்தத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 38,147,382 இற்குரிய ரூபா 190,736 தொகையான நிர்மாண கைத்தொழில் பிணை நிதிய வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 371 | (i) 16 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 204,000 தொகையான முற்பணத்தைத் தீர்ப்பதற்கு 45 நாட்கள் முதல் 351 நாட்கள் வரையான கால இடைவெளியை எடுத்தமை அவதானிக்கப்பட்டது. வழங்கப்பட்ட கட்டுநிதி வழங்கப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 இற்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 33,000 தொகையான 03 முற்பணங்கள் அவ்வாறு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) எவ்வித திட்டமுமின்றி முற்பணம் வழங்கப்பட்டமையின் காரணமாக செலவிடப்பட்ட பணத்தில் அரைவாசியினை விட அல்லது அதற்கு அண்ணளவான தொகையை சேமிக்கப்பட்டு தீர்க்கப்பட்ட 43 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும் வழங்கப்பட்ட முற்பணம் தீர்க்கப்படுவதற்கு முன் மீண்டும் முற்பணம் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் முற்பணத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் செலவு செய்யாமல் தீர்க்கப்பட்டிருந்த 10 சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 2002 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை ரூபா 57,250 பெறுமதியான 14 கேள்வி வைப்புக்களைத் தீர்வு செய்வதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ |

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 | ரூபா 295,948 பெறுமதியான நூலகப் புத்தகங்கள், ரூபா 438,382 தொகையான எழுதுகருவிகள் மற்றும் ரூபா 1,581,988 தொகையான வெளியீடுகள் போன்ற இருப்புக்கள் தொடர்பாக உள்ளமை தொடர்பில் உறுதிப்படுத்துவதற்காக பௌதீக மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2000 சனவரி 11 ஆந் திகதிய PF/PE/5 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளத்திற்கு மேலதிகமாக படிகள் வழங்கும் போது அமைச்சரவை அல்லது பொது நிருவாக அமைச்சு அல்லது பொதுத் திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்காக பணிப்பாளர் உட்பட பதவியணியினருக்காக ரூபா 307,522 தொகையான ஊக்குவிப்பு படிகள் ஐக்கிய நாடுகளின் மக்கள் குடியிருப்பு வேலைத்திட்டத்தின் சேமிக்கப்பட்டட தொகையில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2000 பெப்ரவரி 21 மற்றும் 2013 சனவரி 11 ஆந் திகதிகளில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு உரித்தில்லாத பதவியொன்றிற்காக ஊடக ஆலோசனையாளர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு மாதாந்தம் ரூபா 10,000 ஊக்குவிப்பு படியும் ரூபா 669,600 தொகையான வருடாந்த சம்பளமும் ஒவ்வொரு மாதத்திலும் 5 நாட்களுக்காக விடுமுறை தினச் சம்பளமாக ரூபா 10,000 வீதம் மீளாய்வாண்டில் ரூபா 120,000 தொகை வருகை மற்றும் வெளிச்செல்லல் தொடர்பான எவ்வித எழுத்து மூல சான்றுகள் உறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக தொலைபேசிப் பட்டியலுக்காக ரூபா 33,170 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்காக நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 2,502,704 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு உடனொத்த முன்னைய ஆண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,575,023 பற்றாக்குறையாக இருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,072,319 ஆன அதிகரிப்பொன்று ஏற்படுவதற்காக செயற்பாட்டு வருமானம் ரூபா 9,806,810 ஆல் உயர்வடைந்தமை முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அவர்களின் கடமைகளை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றக்கூடிய வகையில் செயலமர்வுகளையும் பயிற்சி பாடநெறிகளையும் நடாத்துவதற்கு 8 பிரிவுகளுக்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 20,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இதற்காக ரூபா 21,466,810 தொகை

செலவிடப்பட்ட போதிலும் அது தொடர்பாக பரீட்சித்த போது நிறுவகம் திட்டமிட்ட செயலாற்றல் இடம்பெறாதிருந்தமை மற்றும் ஒவ்வொரு பிரிவின் செயன்முன்னேற்ற அறிக்கை மற்றும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு

(அ) பொறியியல் பிரிவின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 32 நிகழ்ச்சித்திட்டங்களில் 02 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படாதிருந்ததுடன் அதில் ஒன்று மாகாண பொறியியல் நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியாகும். மாகாண சபை மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 400,000 தொகையில் ரூபா 194,016 தொகை செலவுசெய்து 02 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) பொது முகாமைத்துவ பிரிவில் திட்டமிடப்பட்ட 24 நிகழ்ச்சித்திட்டங்களில் 21 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன், மதிப்பிடப்பட்டிருந்த பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை 1,170 ஆக இருந்த போதிலும், 711 பேர் பயிற்சியளிக்கப்பட்டமையால் ஒருவருக்கான சராசரிச் செலவினம் ரூபா 2,620 தொகையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இப்பிரிவில் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் பாடநெறியொன்று நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தொடர்பான அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வெளிவாரி பணிப்பொறுப்புக்களை பொறுப்பேற்றல் அந்நிறுவகத்தின் நோக்கத்திற்குட்ட செயற்பாடொன்றாகும். நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அவ்வாறான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக உள்ளூர் இலங்கை ஆளுகை நிறுவகத்தின் உத்தியோகத்தர்களுக்கு 2000 சனவரி 11 ஆந் திகதிய PF/PE/5 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க திறைசேரி செயலாளரின் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 279,700 ஆன நானாவித படிகளுக்காக (ஒட்டுமொத்த மேற்பார்வை, சமூகமளித்தல், கூட்டிணைப்புப் படிகள், செயலாளர் படிகள், கணக்காய்வுப் படிகள், கணக்காளர் படிகள், எழுதுவினைஞர் படிகள் மற்றும் அ.அ.உ. படிகள் போன்ற) கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி, நிதி முகாமைத்துவப் பிரிவிற்கு ரூபா 2,400,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்நிதிஏற்பாடு மேவுகை செய்யப்படும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. உள்ளூராட்சி மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா – 2012/2013 என்ற ஒரு வருட நிகழ்ச்சித்திட்டம் 2012 இன் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டின் யூன் மாதம் வரை 11 நாட்கள் நடாத்தப்பட்டிருந்தது. மாகாண சபை மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 400,000 தொகையில் ரூபா 24,600 தொகை செலவு செய்து ஒரு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டிருந்தது.

(உ) சட்டப்பிரிவு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 21 ஆக இருந்த போதிலும், 39 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 2,000,000 தொகையை விஞ்சி ரூபா 1,179,460 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) ஆராய்ச்சி பிரிவு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 24 ஆக இருந்த போதிலும், 27 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன், ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 2,000,000 தொகையை விஞ்சி ரூபா 227,504 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(எ) 09 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய செலவினக் கணக்கிலும் அதற்குரிய செயன்முன்னேற்ற அறிக்கைகளிலும் காணப்படும் செலவினங்களுக்கு இடையே ரூபா 4,093,887 ஆன வேறுபாடு அஅவதானிக்கப்பட்டது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 2,398,282 பெறுமதியான சொத்துக்கள் பௌதீக பரிசோதனையின் போது மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 1,219,592 பெறுமதியான சொத்துக்கள் நிறுவகத்தின் ஒவ்வொரு பிரிவின் மூலம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வந்திருந்ததுடன் அவை சொத்துப் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி மன்றம் தொடர்பான இலங்கை நிறுவகத்தின் புதிய கட்டிடத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் ரூபா 10,639,382 தொகை சேவையை ஈடுபடுத்துவதற்காக முற்பணமொன்றாக (Mobilization Advance) ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக வழங்கப்பட்டிருந்த முற்பண பிணை (Advance Bond) மற்றும் ரூபா 2,660,000 ஆன செயலாற்றல் பிணை (Performance Bond) 2014 திசெம்பர் 01 ஆந் திகதி வரையில் காலவதியாகியிருந்ததுடன், நிறுவகத்தினால் 2015 யூன் 25 ஆந் திகதி வரையிலும் அதனை நீடிப்பதற்காக அல்லது புதிய பிணையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளுர் ஆளுகை தொடர்பான இலங்கை நிறுவகம் மற்றும் மாகாண சபை மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சு, எதிர்கால தேவைப்பாடு தொடர்பாக முறையான ஆய்வொன்றை மேற்கொள்ளாமல் நிர்மாணங்களை திட்டமிட்டமையால் 2013 நவம்பர் 28 இல் 4 மாடிகளுக்காக ரூபா 53 மில்லியனுக்கு கைச்சாத்திட்ட ஒப்பந்த உடன்படிக்கை தொகை பின்னர் ரூபா 98 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டமையால் 85 சதவீதமான அளவில் விலை விலகலொன்று இடம்பெற்றிருந்தது. 2014 செப்தம்பர் 30 இல் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த கட்டிடம் 2015 யூன் மாதம் வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், பரப்புதல் (pilling) வேலை பூர்த்தி செய்யப்பட்டு அத்திவாரம் இடப்பட்டு தூண்களை மேலே உயர்த்துவது மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**4.4 விளைவற்ற மற்றும் குறைப்பாயன்பாடுடைய சொத்துக்கள்**

பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 3,212,800 பெறுமதியான சொத்துக்கள் விளைவற்று இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.5 இனங்காணப்பட்ட நட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் வரவேற்பு உத்தியோகத்தர் மற்றும் ஆராய்ச்சி கற்கைக்கான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு ரூபா 279,966 தொகை செலவு செய்து பத்திரிகை விளம்பரம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக எந்தவொரு உத்தியோகத்தரும் நிறுவகத்தினால் ஆட்சேர்க்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரூபா 311,000 இற்கு இணையத்தளமொன்றை வடிவமைப்பதற்காக முற்பணமாக ரூபா 77,500 தொகை 2014 ஒக்தோபர் 28 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், 2015 யூன் 25 ஆந் திகதி வரையிலும் அதனை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததால் முற்பணமாகச் செலுத்தப்பட்ட பணம் விளைவற்ற செலவினமொன்றாக மாறியிருந்தது.

**4.6 பதவியணியினர் நிருவாகம்**

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 48 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான எண்ணிக்கை 37 ஆக இருந்தமையால் வெற்றிடங்கள் 11 ஆகும்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பிரிவின் படி கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2015 மே 14 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மார்ச் 05 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் கணக்குக் குழுவின் தீர்மானித்தின் படி, 2011 ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் செலுத்தப்பட்ட உபகாரப் படிகளுக்காக மேவுகை அங்கீகாரம் திறைசேரியிலிருந்து பெறவேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2015 யூன் மாதம் வரையிலும் அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தரொருவர் விண்ணப்பித்த ரூபா 1,447,800 தொகையான ஆதனக் கடனை விட ரூபா 100,000 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக நிறுவகத்தின் தலைவருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக முகாமைத்துவத்தின் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) சொத்துக்கள் முகமைத்துவம்
(ஆ) ஊழியர் கடன்
(இ) செயலமர்வுகளை நடாத்துதலும் படிகள் கொடுப்பனவும்